

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (27.2.2025) தலைமைச் செயலகத்தில், டெல்டா மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதையொட்டி கொள்முதல் நிலையங்களில் உள்ள நெல்மூட்டைகளை பாதுகாப்பது குறித்து தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் எம்.சாய்குமார், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) சா.விஜயராஜ்குமார், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சிறப்புச் செயலாளர் எஸ்.கணேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.2.2025) முகாம் அலுவலகத்தில், முரசொலி புகைப்பட நிபுணர் ஜி.மனோகரன், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் டாக்டர் எம். சகானா – டாக்டர் வி.கேசவராஜ் ஆகிய புதுமணத் தம்பதியருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### இந்தியை திணிக்க நினைக்கும் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## ஜெ.கே.ரமேஷ் – கலை கதிரவன் – நவ்ஷாத் பங்கேற்பு!

தென்காசி, பிப். 28 - தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து தென்காசி ரயில் நிலையம் முன்பு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க மாணவரணி சார்பில் மற்றும் தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு சார்பிலும் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஜெ.கே. ரமேஷ் தலைமையில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் கலை கதிரவன் (தென்காசி)நவ்ஷாத் (கடையநல்லூர்)மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா,மாவட்ட துணைச் செயலாளர்கள் கென்னடி, தமிழ்ச்செல்வன்,பொருளாளர் ஷெரிப் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாணவரணி துணை அமைப்பாளர் ராஜா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் பங்கேற்று கோஷங்களை எழுப்பி கண்டன உரையாற்றினார்.

நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





